பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182

தினப்புயல்
PTN news
THINAPPUYAL
තිනප්පුයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்



புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 34

# ஐக்கிய நாடுகள் சபை வடக்கு கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவேண்டும் என கோரிக்கை



ஐக்கிய நாடுகள் சபை வடக்கு கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டுமென அமெரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா, ஜப்பான் நாடுகளை உள்ளக்கிய குவாட் அமைப்பிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தமிழ் தேசிய கட்சியின் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

வல்வெட்டித்துறையில் உள்ள அவரது இல்லத்தில் கடந்த (10) நடந்த ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இது தொடர்பான கடிதம் ஏற்கனவே இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில், ஏனைய மூன்று நாட்டு தூதரகங்களிற்கும் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். (03)

# ௯0 பாடசாலைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பம்

மன்னார் மற்றும் மடு கல்வி வலயங்களில் உள்ள 90 பாடசாலைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தெரிவித்தார்.



மன்னார் மாவட்டத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பாடசாலைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணி அளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (03)

# தொல்பொருள் திணைக்களத்தின் அத்துமீறல்கள் குறித்து தெளிவுபடுத்திய சாணக்கியன்



இலங்கைக்கான நோர்வே உயர்ஸ்தானிகர் *Trine Jøranli Eskedal* மற்றும் நெதர்லாந்து உயர்ஸ்தானிகர் *Tanja Gonggrijp* ஆகியோரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் சந்தித்து பேசியுள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று (12) நண்பகல் குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இதன்போது, மட்டக்களப்பு மாவட்டத்தை எதிர்காலத்தில் முன்னேற்றும் செயற்பாடுகளில் முதன்மையான தகவல் தொழில்நுட்பத்துறை மற்றும் இயற்கை அழகுடன் காணப்படும் மட்டக்களப்பு மாவட்ட சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் பல திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது. (03)

# ஓய்வுக்கான வயதெல்லையை அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம்

தனியார் துறை ஊழியர்களின் ஓய்வு பெறுவதற்கான குறைந்த பட்ச வயதெல்லையை 60 வயதாக அதிகரிப்பதற்கான திருத்த சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் (11) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் பின்வருமாறு. தனியார் துறை ஊழியர்கள் ஓய்வு பெறுவதற்கு தற்போது காணப்படும் குறைந்த பட்ச வயதெல்லையைத் திருத்தம் செய்வதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்கு 2021 மார்ச் மாதம் 23 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (03)

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## விவசாயிகளுக்கு சேதனப் பசளை விநியோகம்

நாட்டில் அரசால் உர இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கும் நிலையில், பெரும் கேள்விக்குறியுடன் இம்முறை எமது நாட்டின் விவசாயிகள் நெற்பயிர்ச் செய்கையினை மேற்கொண்டுள்ளனர். அத்துடன் பல விவசாயிகள் உரத் தடையால் விதைக்கும் நில அளவைக் குறைத்து இம்முறை நெல்லைப் பயிரிட்டுள்ளனர். சிலர் கைவிடத் தீர்மானித்தும் உள்ளனர்.

இந்த நிலையில் தான், நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்குப் பெரும்போகத்திற்கான சேதன உர விநியோகம் இன்று முதல் ஆரம்பிக்கப்பட உள்ளது.

விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே இதனைத் தெரிவித்துள்ளார். நேற்று (12) இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விவசாயத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்கமைய, அம்பாறை, அனுராதபுரம், பொலன்னறுவை, மொனராகலை, திருகோணமலை, மட்டக்களப்பு, ஹம்பாந்தோட்டை, குருநாகல் மற்றும் புத்தளம் முதலான மாவட்டங்களுக்கு, சேதன உர விநியோகத்தில் முன்னுரிமை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் வேறு வழியின்றி இந்தப் பசளையினை வயலுக்குப் பயன்படுத்த வேண்டிய நிலையில் விவசாயிகள் உள்ளனர். மண்ணைப் பழக்கப்படுத்தாமல் உடனடியாக இந்த வகையான சேதனப் பசளையை பயன்படுத்துவதனால் விளைச்சலின் தன்மை குறித்து பெரும் கேள்வி எழுந்துள்ளது. இப் பசளையின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. புற்களுக்குப் பயன்படுத்தும் மருந்துகளின் விலைகளும்உயர்வடைந்துள்ளன. பற்றாக்குறையும் நிலவுகிறது.

இப் பசளை குறித்து அரசினால் இதுவரை எதுவிதமான வேலைத்திட்டங்களும் கிராம மட்டங்களில் நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை. எதுவித பயிற்சிகளும் வழங்கப்படவில்லை. இதனது நன்மை தீமை குறித்து எதுவித விளக்கங்களும் வழங்கப்படவில்லை.

இவ் சேதனப் பசளையானது உடலுக்கு ஆரோக்கியமானது என்கிற போதிலும் இதற்கான முறையான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு, படிப் படியாக அனைத்து விடயங்களும் செயற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அதனைவிடுத்து திடீரென மாற்றங்களைக் கொணர்தல் சாத்தியமாகுமா என்கிற கேள்வி எழாமலில்லை.

## பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் படிப்படியாக ஆரம்பிக்கப்படும்




கொவிட் தடுப்பூசியை பெற்றுக் கொண்டதன் மூலம் மாணவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழகங்களை திறந்து மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் படிப்படியாக ஆரம்பிக்கப்படும் என கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சந்திரிகா விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

20 முதல் 30 வயதிற்குட்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு கொவிட் தடுப்பூசி செலுத்தும் பணிகள் நேற்று முன்தினம் (11) ஆரம்பிக்கப்பட்டன.

பல்கலைக்கழக மாணவர்களில் 11 வீதமானவர்கள் இதுவரை தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளனர். கொழும்பு பல்கலைக் கழக மாணவர்களுக்கு கொவிட் தடுப்பு மருந்தின் இரண்டாவது டோஸ் நேற்று வழங்கப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர்களில் பெரும்பாலானோர் சைனோபார்ம் தடுப்பூசியை பெற்றுள்ளனர். எதிர்வரும் வெள்ளிக் கிழமை வரை அருகில் உள்ள பல்கலைக்கழகங்களுக்குச் சென்று, மாணவர்கள் கொவிட் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**நாட்டில் மேலும் 23 கொவிட் மரணங்கள் நேற்று (12.10.2021) பதிவாகியுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 13,377 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் நேற்று 671 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 527,735 ஆக அதிகரித்துள்ளது.**

## சந்திரசேகரம் ராஜனின் முயற்சியால் பனங்காடு பிரதேச வைத்தியசாலை பிரச்சினைக்கு தீர்வு

(நூருல் ஹுதா உமர்)

அக்கரைப்பற்று பனங்காடு பிரதேச வைத்தியசாலையில் உள்ள அவசர சிகிச்சைப்பிரிவு 24 மணிநேரமும் இயங்க முடியாத நிலையில் உள்ளதையும். மேலும் பல குறைகளுடன் இயங்கிவரும் வைத்தியசாலையின் தேவைகளை உடனடியாக நிவர்த்தி செய்துதருமாறு கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜனுக்கு வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர் முன்வைத்த வேண்டுகோளுக்கிணங்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது விடயம் தொடர்பில் மாத்தளை மாநகரசபை முதல்வர் சந்தனம் பிரகாசின் ஏற்பாட்டில் கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சரது அலுவலகத்தில் சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்லவை கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் சந்தித்து கலந்துரையாடியதன் பலனாக பனங்காடு பிரதேச வைத்தியசாலை 24 மணிநேரமும் இரவு பகலாக இயங்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

வைத்தியசாலை சீராக இரவு நேரத்திலும் இயங்குவதற்கு வைத்தியர்கள் தங்கியிருக்க முடியாத நிலை நிலவுகிறது. கூடவே வைத்தியர் பற்றாக்குறையும் நிலவுகிறது. இதனை நிவர்த்திசெய்து தருமாறு கோரும் மகஜரை அமைச்சரிடம் கையளித்து கலந்துரையாடியதாகவும் வைத்தியசாலையில் இரவில் வைத்தியர் தங்கியிருந்து அவசர சிகிச்சைப்பிரிவை 24 மணிநேரமும் இயக்கவைக்க வேண்டுமென தான் அமைச்சருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டதாகவும் அதனை உடனடியான சுகாதார அமைச்சரின் பிரத்தியேக செயலாளரின் கவனத்திற்கு கொண்டுவந்த அமைச்சர் உடனடியாக வைத்தியரொருவரை நியமிக்க நடவடிக்கை எடுத்தார்.

மேலும் அன்றே அவசர சிகிச்சைப்பிரிவை 24 மணிநேரமும் இயங்கவைக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு அமைச்சர் இந்த சந்திப்பின் போது உத்தரவிட்டார். அதன்படி அன்றிரவே அவசர சிகிச்சைப்பிரிவு இயங்க ஆரம்பித்துள்ளது மகிழ்ச்சியளிப்பதாக சந்திப்பின் பின்னர் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் நீர்பாசன அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே. சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் எஸ்.எச்.முனசிங்க. சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அசேல குணவர்த்தன. மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே. மாத்தளை முதல்வர் ச.பிரகாஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.





## ஐக்கிய நாடுகள் சபை...

அத்துடன், தமிழ் தேசிய கட்சிகளிற்கும், அதன் பாராளுமன்ற உறுப்பினர்களிற்கும் அந்த கடிதம் பார்வைக்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அனுப்பப்பட்ட அந்த கடிதத்திலே 1987 ஆம் ஆண்டின் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாகிய, நடைமுறையிலுள்ள மாகாண சபைகள் முறைமையானது இலங்கையால் கடந்த 3 வருடங்களாகக் கைவிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கமானது தேர்தலை நடாத்துவதற்கு எவ்வித முயற்சியையும் எடுக்காமல், பதிலாக சபைகளுக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை அகற்றுவதிலேயே ஈடுபட்டுள்ளது.

இந்திய–இலங்கை ஒப்பந்தமானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்குரிய பிராந்தியத்தை தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகமாகத் தெளிவாக அங்கீகரித்துள்ளது.

குறித்த உடன்படிக்கையின் மூலமாகக் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பிற்கான 13வது திருத்தத்தை இலங்கையானது எப்பொழுதுமே முழுமையாக அமுல்படுத்தவில்லை என்பதுடன் தற்பொழுது அதனை மேலும் பலமிழக்கச் செய்வதிலேயே ஈடுபட்டுள்ளது.

இந்திய – பசுபிக் பிராந்தியத்தில் நிரந்தர அமைதியை அடைவதற்கும் அதே சமயம் எமது பிராந்தியத்தில் சுதந்திரத்தையும் ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் உதவுவதன் பொருட்டு தமிழ் மக்கள் உலகிலுள்ள அதிகாரம் மிகுந்த நாடுகளில் ஒன்றாகிய இந்தியாவிடம் அழைப்பு விடுக்கின்றனர்.

தமிழ் மக்களுக்கு எதிரான கடந்த கால வன்முறை வடிவங்கள் மீள இடம்பெறாமலிருப்பதற்கு உத்தரவாதம் அளிக்கவல்ல நிரந்தர அரசியல் தீர்வினை சனநாயக ரீதியில் நிலைநாட்டுவதற்காகவும், அவர்களுக்கான ஈடுசெய் நீதியை வழங்குவதன் பொருட்டும் அவர்களை அடக்குமுறையிலிருந்தும் ஆக்கிரமிப்பிலிருந்தும் விடுவிப்பதன் பொருட்டும் இலங்கையின் வடக்கு– கிழக்குப் பிராந்தியத்திலுள்ள மக்களுக்காக ஐ.நாவினால் கண்காணிக்கப்படுகின்ற குவாட் நாடுகளான அவுஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா போன்றனவற்றால் நடாத்தப்படுகின்றதுமான பொதுசன வாக்கெடுப்பினை ஒருங்கிணைப்பதற்காக உடனடியானதும் அவசரமானதுமான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு இந்தியாவிடம் கோருகின்றேன் என்கிறார். –யாழ். நிருபர் பிரதீபன்–

## 90 பாடசாலைகள்...

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் மடு கல்வி வலயத்தில் 44 பாடசாலைகள் 2,588 மாணவர்களைக் கொண்டதாகவும், மன்னார் வலயத்தில் 46 பாடசாலைகள் 3,784 மாணவர்களைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. இந்த நிலையில் குறித்த பாடசாலைகள் மீண்டும் ஆரம்பமாக உள்ளது.

குறித்த பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்றபோது பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் குறித்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெளிவுபடுத்தினார்.

மேலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பஸ் போக்குவரத்து தொடர்பாக அரச மற்றும் தனியார் போக்குவரத்து துறையினருடன் கலந்துரையாடி இருந்தோம்.

அதன் அடிப்படையில் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் இருந்து மன்னாரிற்கு வருகின்ற ஆசிரியர்களுக்காக விசேட பஸ் சேவை ஒன்றையும் ஆரம்பிக்க உள்ளமை குறித்தும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பயணம் செய்வதற்கு முறையான போக்குவரத்து சேவையை ஆரம்பிக்குமாறு அரச தனியார் போக்குவரத்து துறையினருக்கு ஆலோசனை வழங்கி உள்ளோம். எதிர்வரும் 21 ஆம் திகதி முன்பள்ளி பாடசாலைகளையும் ஆரம்பிக்க தீர்மானித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் மன்னார், மடு வலயக்கல்வி பணிப்பாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பொலிஸ் அதிகாரி, ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

-மன்னார் நிருபர் லெம்பட்-

**அடக்கப்படாமல் உள்ள மனமும், அறவழியில் செலுத்தப்படாத மனமும் நம்மை எப்போதும் கீழ் நோக்கியே இழுத்துச் சென்று அழித்துவிடும். அடக்கப்பட்ட மனமும், அறவழியில் செல்லும் மனமும் நமக்குப் பாதுகாப்பை அளித்திடும். உலகபந்தங்களில் இருந்து விடுதலையளிக்கும்.**

**எல்லாப் பெருமையையும், எல்லா ஆற்றலையும், எல்லாத் தூய்மையையும் ஆன்மா தூண்டுகிறதே தவிர, ஆன்மாவைத் தூண்டுவது எதுவும் இல்லை.**

**ஆயிரம் ஆண்டுகள் கங்கையில் நீராடிய போதிலும் சரி, அல்லது ஆயிரம் ஆண்டுகள் காய்கறி உணவையே உண்டு வந்தாலும் சரி, உன்னுள்ளே இருக்கும் ஆன்மிகம் விழிப்படையாவிட்டால், அதனால் ஒரு பயனும் இல்லை.**

**– சுவாமி விவேகானந்தர்**

## தொல்பொருள் திணைக்கள...

அத்துடன், மட்டக்களப்பில் இடம்பெற்றுவரும் காணி அபகரித்தல் சட்டவிரோத குடியேற்றம் மற்றும் மண் அகழ்வு உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டதுன், இதற்கான ஆதாரங்களுடன் கூடிய ஆவணமும் கையளிக்கப்பட்டது.

இதன்போது சாணக்கியன் விசேட கோரிக்கை ஒன்றினையும் முன்மொழிந்திருந்தார்.

குறிப்பாக தொல்பொருள் எனும் பெயரில் காணிகள் சூறையாடப்படுவதை தடுக்கும் நோக்குடன் தொல்பொருள் சம்பந்தமான செயற்பாடு கள் அனைத்தும் யுனெஸ்கோ (UNESCO) அமைப்பின் ஊடாக சர்வதேச கண்காணிப்புடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

இதன்மூலம் நாம் எதிர்கொள்ளும் சட்ட விரோத காணி அபகரிப்பு போன்ற பிரச்சினைகளை தடுக்க முடியும் என இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார். அத்துடன், குறித்த சந்திப்பானது சமகால அரசியல் பரிமாற்றத்துடன் முற்றுப்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## ஓய்வுக்கான வயதெல்லை...

அதற்கமைய, தயாரிக்கப்பட்ட அடிப்படைச் சட்டமூலம், பிரதமர் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள ஆடைக் கைத்தொழிற்துறை மற்றும் வர்த்தகத் துறைகளில் தாக்கம் செலுத்தும் கொள்கை ரீதியானதும் சட்டரீதியானதுமான விடயங்கள் பற்றி ஆராயும் குழுவில் தொடர்புடைய அனைத்துத் தரப்பினர்களின் பங்கேற்புடன் தொடர்ந்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

குறித்த குழுவில் எட்டப்பட்ட உடன்பாடுகளுக்கமைய முன்மொழியப்படும் சட்டம் நடைமுறைக்கு வரும் நாளில் 52 வயதை எட்டாத ஊழியர்களின் ஓய்வு வயதை 60 வரைக்கும் நீடிப்பதற்கும், சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியில் 52 வயது அல்லது அதற்கு அதிகமான ஊழியர்களின் வயதுக்கேற்ப மூன்று பிரிவுகளின் கீழ் உயர்ந்தபட்சம் 59 வயது வரை பணியாற்றுவதற்கு இயலுமான வகையில் ஏற்பாடுகளை உள்வாங்கி சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள தனியார் துறை ஊழியர்கள் ஓய்வு பெறும் குறைந்தபட்ச வயதுச் சட்டத்தைப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக தொழில் உறவுகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(அரசாங்க தகவல் திணைக்களம்)

## மாணவர்களின் சுகாதாரம் மற்றும் நோய் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் வேலை முன்னெடுப்பு

**(பைஷல் இஸ்மாயில், துஷாரா)**

பாடசாலைகள் கற்றல் நடவடிக்கைகளுக்காக திறக்கப்படவுள்ள நிலையில் மாணவர்களின் சுகாதாரம் மற்றும் நோய் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் வகையில் கொம்மாதுறை விநாயகர் வித்தியாலத்தில் (11) சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சமூக அபிவிருத்தி, சுகாதாரம் மற்றும் கல்வி மேம்பாட்டு பணிகளை முன்னெடுத்து வரும் தன்னார்வ தொண்டு நிறுவனமான மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பினால் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையிலும் சமூகத்தின் நலன் கருதி கொம்மாதுறை விநாயகர் வித்தியாலய வளாகம் மற்றும் வகுப்பறைகள் துப்பரவு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அருவி பெண்கள் வலையமைப்பின் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான மயூரி ஜனனுடன் அருவி பெண்கள் வலையமைப்பின் உத்தியோகத்தர்கள், அருவி பெண்கள் வலையமைப்பின் பெண்கள் சிறுகுழு உறுப்பினர்கள், 2ம் கட்ட தலைமுறையினர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் என்பவர்களின் பங்களிப்புடன் மட்டக்களப்பு வாகனேரி கோகுலம் வித்தியாலய மாணவர்களின் சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பாடசாலை வளாகம் மற்றும் வகுப்பறைகளை துப்பரவு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டதுடன் விசேட தேவைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான சுகாதார பாதுகாப்பு பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் கல்குடா வலையக்கல்வி பணிமனையின் முகாமைத்துவ பிரதி கல்வி பணிப்பாளர் கனகசுந்தரம் ஜெயவதனன் அவர்களும் கலந்துகொண்டார்.





# மறைமுக ராணுவம் பலம்: வட கொரிய அதிபர் உறுதி

வட கொரியா. உலக நாடுகளின் கண்ணுக்குத் தெரியாத வகையில் ராணுவ பலத்தை அதிகரிக்க திட்டமிட்டுள்ளது.

வட கொரியாவில் ஆளும் கட்சியின் 76வது ஆண்டு விழாவை முன்னிட்டு. ராணுவக் கண் காட்சி நடந்தது. இதில் கண்டம் விட்டு கண்டம் தாண்டிச் சென்று தாக்கும் சக்தி வாய்ந்த ஏவுகணைகள். நிலம் மற்றும் நீரில் செலுத்தவல்ல நவீன ஏவுகணைகள். உயர் தொழில்நுட்ப ராணுவ தளவாடங்கள் ஆகியவை இடம் பெற்றிருந்தன. இந்த கண்காட்சியை வட கொரிய அதிபர் கிம் ஜங் உன் பார்வையிட்டார்.

இதைத் தொடர்ந்து அவர் பேசியதாவது: நம்முடன் விரோதம் இல்லை என. அமெரிக்கா தொடர்ந்து கூறி வருகிறது. அதை நம்பும்வகையில். அமெரிக்காவின் செயல்பாடுகள் இல்லை. தொடர்ந்து நம்மை விரோதியாகவே அமெரிக்கா பார்க்கிறது. அமெரிக்கா தன் தவறான முடிவுகள் மற்றும் செயல்களால் இந்த பிராந்தியத்தில் தொடர்ந்து பதற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. கொரிய தீபகற்பத்தில் ஸ்திரமற்ற சூழலை உருவாக்குவதில் அமெரி



க்கா முக்கிய பங்கு வகிக்கிறது.

அதனால் பிற நாடுகள் அறியா வகையில், யாராலும் வெல்ல முடியாத ராணுவ ஆற்றலை உருவாக்க. நாம் உறுதி எடுத்துள்ளோம். நாம் ராணுவ பலத்தை அதிகரிக்க. அதிகம் செலவிடுவதாக. தென் கொரியா விமர்சிக்கிறது.

தென் கொரியாவிற்காக நாம் ராணுவ பலத்தை அதிகரிக்கவில்லை. தென் கொரியா உடன் மீண்டும் போர் புரியவும் நமக்கு விருப்பமில்லை. ஆனால். அமெரிக்கா நம் மீது பகைமை பாராட்டுகிறது. அமெரிக்கா நம் மீது விதித்துள்ள தடைகளை விலக்குவதுடன். தென் கொரியா உடன் நடத்தும் கூட்டு ராணுவ பயிற்சியை நிறுத்த வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

## பயங்கரவாதிகளுக்கு எதிரான வேட்டை - காஷ்மீரில் ஐந்து பேர் சுட்டுக்கொலை



ஜம்மு - காஷ்மீரில் பயங்கரவாதிகளுக்கு எதிரான வேட்டையில் ஐந்து பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ஜம்மு - காஷ்மீரில் கடந்த சில நாட்களாக அப்பாவி மக்களை குறி வைத்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். கடந்த வாரத்தில் தெருவோர வியாபாரி உட்பட ஏழு பொது மக்கள் கொல்லப்பட்டனர். நேற்று முன்தினம் பயங்கரவாதிகளுடன் நடந்த சண்டையில் ஐந்து ராணுவ அதிகாரிகள் வீர மரணம் அடைந்தனர். இதையடுத்து பயங்கரவாதிகளுக்கு எதிரான வேட்டையில் பாதுகாப்புப் படைகள் இறங்கியுள்ளன. தெற்கு காஷ்மீரின் ஷோபியான் மாவட்டத்தில் அடுக்குமாடி குடியிருப்புக்குள் பதுங்கியிருந்த பயங்கரவாதிகள் நேற்று சுற்றி வளைக்கப்பட்டனர்.

அதில் எதிர்ப்புப் படை என்ற பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த மூன்று பேர் கொல்லப்பட்டனர். பயங்கரவாதிகளை வெளியே வரவழைக்க பாதுகாப்புப் படையினர் குண்டுகளை வீசியதில், இரண்டு வீடுகள் சேதம் அடைந்தன. இதற்கிடையே ஷோபியான் மாவட்டத்தில் நடந்த மற்றொரு தாக்குதலில் இரண்டு பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

## 10 நாடுகளுக்கான பயணக் கட்டுப்பாட்டை நீக்கியது தாய்லாந்து

குறைந்த பாதிப்புக்களை கொண்ட 10 நாடுகளை சேர்ந்த இரண்டு கொரோனா தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டவர்களுக்கான தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு தாய்லாந்து தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த விடயம் குறித்து அந்த நாட்டு மக்களுக்குக் கருத்துரைத்த தாய்லாந்து பிரதமர் பிரயுத் (ச்)சன் ஒச்சா (Prayuth Chan-ocha) நாட்டின் வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலாத்துறையை கட்டியெழுப்புவதற்கு இது உதவும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

குறைந்த ஆபத்தில் காணப்படும் 10 நாடுகளில் சீனா, ஜேர்மன், பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் அடங்குவதாக தாய்லாந்து பிர தமர் சுட்டிக்காட்டியுள்ளார். குறித்த நாடுகளிலிருந்து வருகின்ற பயணிகள் கொவிட்-19 பரிசோதனை அறிக்கை



சமர்ப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவர்களுக்குத் தாய்லாந்தில் மற்றுமொரு பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

குறித்த பரிசோதனை அறிக்கைகளின் முடிவுகளுக்கு அமைய நாட்டின் சுற்றுலா நடவடிக்கைகளுக்கு அவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என தாய்லாந்து அறிவித்துள்ளது. இதேவேளை எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதி முதல் பல பொது இடங்களை மீளத் திறப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்த தாய்லாந்து பிரதமர், இதனையடுத்து பல நாட்டு மக்களுக்கும் தாய்லாந்துக்குள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

## விமானங்களில் 100 சதவீத பயணிகளை அனுமதிக்க இந்தியா தீர்மானம்

எதிர்வரும் 18ம் திகதி முதல் உள்நாட்டு விமானங்களில் 100 சதவீத பயணிகளை அனுமதிக்க இந்தியா தீர்மானித்துள்ளது. கொவிட்-19 பரவல் காரணமாக இந்தியாவில் உள்நாட்டு விமான சேவைகளுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு விமானப் போக்குவரத்தின் போது. 54 சதவீத இருக்கை வசதியை மாத்திரமே பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவல் குறைவடைந்துள்ளதை அடுத்து உள்நாட்டு விமான சேவைகளில் விதிக்கப்பட்டிருந்த



அனைத்து கட்டுப்பாடுகளையும் மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சு நீக்கியுள்ளது. இதற்கமைய, எதிர்வரும் 18ம் திகதி முதல் உள்நாட்டு விமான சேவை எந்தவித கட்டுப்பாடுகளுமின்றி 100 சதவீத இருக்கை வசதியுடன் பயணங்களை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கனேடியர்கள் அமெரிக்கா செல்ல அனுமதி

ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராசெனேகா கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்ட கனேடியர்கள் அமெரிக்காவிற்குள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் கனேடியர்கள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உலக சுகாதார அமைப்பு அல்லது அமெரிக்க உணவு மற்றும் மருந்து திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களுக்கு அமெரிக்காவிற்குள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், கொரோனா தடுப்பூசிகளை கலவையாக பெற்றுக் கொண்டவர்களுக்கு அனுமதி வழங்கப்படுமா என்பது இதுவரையில் உறுதியாகவில்லை.

## கீழே விழுந்து நொறுங்கிய சிறிய ரக விமானம் - இந்தியா வம்சாவளி வைத்தியருக்கு நேர்ந்த சோகம்

அமெரிக்காவில் சிறிய ரக விமானம் விழுந்து நொறுங்கியதில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வைத்தியர் உட்பட 2 பேர் உயிரிழந்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இச்சம்பவம் கலிஃபோர்னியா மாகாணம், சான்டீ பகுதியிலுள்ள சான்டானா உயர்நிலைப் பள்ளி அருகே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வைத்தியர் சுகதாதாஸ், அரிஸோனா மாகாணத்தில் யூமா மண்டல மருத்துவ மையத்தில் இருதய நோய் நிபுணராகப் பணியாற்றி வந்துள்ளார். தனக்குச் சொந்தமான சிறிய ரக விமானத்தில் சுகதா தாஸ் திங்கட்கிழமை சென்றுகொண்டிருந்தபோது திடீரென ஏற்பட்ட கோளாறால், அது விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானதில் வைத்தியர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். விமானம் கீழே விழுந்ததில் இரு கட்டடங்கள் தீப்பிடித்துள்ளன, இதில், தரையிலிருந்த மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள் தீயை கட்டுபாட்டுக்குள் கொண்டுவந்தனர். மேலும் இச்சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.